
# நினைக்கிறதற்கும் அதிகமாய்




**“நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு,“ (எபே 3:20)**

நாம் மேற்கண்ட வசனம், நமக்கு மிகவும் ஆறுதலான ஒன்றாகும். ஆவிக்குரிய மற்றும் இப்பூமிக்குரிய தேவைகள் அனைத்திற்கும் மேற்க்கண்ட வசனம் பொருந்தும். ஆம் நம் ஆவிக்குரிய வாழ்க்கையிலும் சரி, இப்பூமிக்குரிய வாழ்க்கையிலும் சரி, நாம் தேவனிடத்தில் எதிர்பார்த்து வேண்டி கொள்கிற காரியங்களை தம்முடைய கால திட்டத்தின்படியே நிறைவேற்றுகிற தேவன், நாம் எதிர்பார்த்து, நினைத்து இருந்த எல்லைக்கும் மேலாக நம்மை ஆசிர்வதிப்பது, நமக்கு தேவனுக்குள்ளாய் ஒரு களிகூறுதலை ஏற்படுத்துகிறது.

நாம் இதை எளிமையாக புரிந்துகொள்ள, உதாரணமாக, ஒரு மாணவன் தான் பரீட்சை எழுதி முடித்துவிட்டு, தேவனிடத்தில் தனக்கு நல்ல வெற்றியை தருமாறு வேண்டிகொள்ளும் பொழுது, தான் உண்மையோடு படித்து எழுதினதற்கு, தனக்கு ஒரு குறிப்பிட்ட மதிப்பெண் கிடைக்கும் என்னு எண்ணியிருக்கையில், அதற்கும் அதிகமாய், தேவ கிருபையால் அவனுக்கு மதிப்பெண் கிடைக்கும் பொழுது, ஒரு விதமான மகிழ்ச்சியோடு, அதே நேரத்தில், இந்த மதிப்பெண் பெறுவதற்கு தான் பாத்திரவானாய் இல்லாத பொழுதும், அதை தேவ கிருபையினால் பெற்று கொள்ளும்பொழுது, அவனிடத்தில் ஒரு வித தாழ்மையும், தேவ அன்பின், இரக்கத்தின் வல்லமையும் வெளிப்படுகிறது. அதை அனுபவித்தவர்களுக்கே அதின் அருமை புரியும். இன்னும், வாழ்வின் பலவித நிலைகளிலும், இப்படிப்பட்ட அனுபவத்தை நாம் உணரலாம். சரியான வேலை கிடைக்காமல், அனுதின தேவைகளை சந்திக்கவாவது ஒரு சிறிய வேலை

கிடைக்காதா என்று எண்ணி பிரயாசப்படும்பொழுது, தான் நினைத்து கூட பார்க்காத ஒரு வேலை ஒருவருக்கு கிடைக்கும்பொழுது, அதினால் உண்டாகும் சந்தோஷம் சொல்லிமுடியாது.

ஆவிக்குரிய பிரகாரமாகாவும், ஒரு சிறு ஊழியத்தை ஆரம்பித்து, ஒரு சிலருக்காவது தினமும் ஆண்டவரின் அன்பை கூற வேண்டும் என்ற பிரயாசத்தோடு ஊழியத்தை ஆரம்பித்தவர்களை, தேவன் வல்லமையாய் எடுத்து உபயோகித்து கோடிக்கணக்கான மக்கள் அவர்களின் மூலமாய் ஆண்டவரை அறிந்து கொள்ளும்படியாய் ஊழிய பாதைகளை மாற்றி அமைக்கும்பொழுது அதனால் உண்டாகும் சந்தோஷமும், நினைத்ததற்கும் அதிகமாய் நம்மை களிகூற செய்கிறது. உலகபிரகாரமான மக்கள் சில உயர்வுகளை அடையும்பொழுது, அது தங்களின் சாமர்த்தியத்தினால் அல்லது சிலருடைய தயவினால், அதிகாரத்தினால் தங்களுக்கு கிடைத்தது என்று எண்ணுகின்றனர். ஆனால் ஒரு தேவ பிள்ளைக்கோ சகலமும் தேவனாலேயே கொடுக்கப்படுகிறது. இப்படியாக நினைத்ததற்கும் அதிகாய் பலனை பெறும்பொழுது, இம்மட்டுமாய் அதற்காக பட்ட பிரயாசத்தின், ஓட்டத்தின் வலிகள் எல்லாம் நமக்கு மறந்து போகிறது.

ஆம் யோசேப்பு எகிப்தில் எதிர்பார்த்ததெல்லாம், ஒரு விடுதலையான வாழ்வைதான். **ஆதி** 40:14,15 வசனங்களில், பான பாத்திரகாரனுக்கு யோசேப்பு அவனுடைய சொப்பனத்தின் அர்த்தத்தை சொல்லி முடித்த பின்பு, **“நீ வாழ்வடைந்திருக்கும்போது, என்னை நினைத்து, என்மேல் தயவுவைத்து, என் காரியத்தைப் பார்வோனுக்கு அறிவித்து, இந்த இடத்திலிருந்து என்னை விடுதலையாக்கவேண்டும். நான் எபிரெயருடைய தேசத்திலிருந்து களவாய்க் கொண்டுவரப்பட்டேன்; என்னை இந்தக் காவல் கிடங்கில் வைக்கும்படிக்கும் நான் இவ்விடத்தில் ஒன்றும் செய்யவில்லை என்றும் சொன்னான்.**“. ஆம் அவர் தேவனிடத்தில் எதிர்பார்த்ததெல்லாம், எகிப்தில் ஒரு சமாதானமான, அவமானமற்ற வாழ்க்கையைதான். அடிமையாக விற்கபட்ட தான், இனி தன் குடும்பத்தை தேடி போகமுடியாத சூழ்நிலையில், தனிமரமாய் தேவனிடத்தில் தவிர வேறுயாரிடமும் தன்னுடைய நிலைமையை கூட சொல்ல முடியாத நிலையில் இருந்தார். ஆனால் தேவன் அவருடைய வாழ்க்கையை ஒரே நாளில் தலைகீழாய் மாற்றி போட்டார். இத்தனை காலமும், எத்தனை பேரிடம் ஒரு அடிமையாய் கைகட்டி நின்றாரோ, அத்தனை பேரும் தொண்டனிட்டு அவருக்கு முன்பாக பணிந்தனர். அதனாலேயே, **ஆதி** 41:51,52 இல், **“யோசேப்பு: என் வருத்தம் யாவையும் என் தகப்பனுடைய குடும்பம் அனைத்தையும் நான் மறக்கும்படி தேவன் பண்ணினார் என்று சொல்லி, மூத்தவனுக்கு மனாசே என்று பேரிட்டான். நான் சிறுமைப்பட்டிருந்த தேசத்தில் தேவன் என்னைப் பலுகப்பண்ணினார் என்று சொல்லி, இளையவனுக்கு எப்பிராயீம் என்று பேரிட்டான்.**“, ஆம் அவர் எதிர்பார்த்ததற்கும் அதிகமாய் தேவன் அவருடைய வாழ்க்கையில் காரியங்களை நடப்பித்தார்.

மேலும் **ஆதி** 48:11 இல் **“இஸ்ரவேல் யோசேப்பை நோக்கி: உன் முகத்தைக் காண்பேன் என்று நான் நினைக்கவில்லை; ஆனாலும், இதோ, உன் சந்ததியையும் காணும்படி தேவன் எனக்கு அருள்செய்தார் என்றான்.**“. ஆம் **ஆதி**

37:33-35 வசனங்களில் **“யாக்கோபு அதைக் கண்டு, இது என் குமாரனுடைய அங்கிதான், ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்துப்போட்டது, யோசேப்பு பீறுண்டுபோனான் என்று புலம்பி, தன் வஸ்திரங்களைக் கிழித்து, தன் அரையில் இரட்டுக் கட்டிக்கொண்டு, அநேகநாள் தன் குமாரனுக்காகத் துக்கித்துக்கொண்டிருந்தான். அவனுடைய குமாரர் குமாரத்திகள் எல்லாரும் அவனுக்கு ஆறுதல் சொல்லவந்து நின்றார்கள்; ஆனாலும் அவன் ஆறுதலுக்கு இடங்கொடாமல், நான் துக்கத்தோடே என் குமாரனிடத்தில் பாதாளத்தில் இறங்குவேன் என்றான். இவ்விதமாய் அவனுடைய தகப்பன் அவனுக்காக அழுதுகொண்டிருந்தான்.“**, மேலும் **ஆதி** 42:36 இல் **“அவர்கள் தகப்பனாகிய யாக்கோபு அவர்களை நோக்கி: என்னைப் பிள்ளையற்றவனாக்குகிறீர்கள்; யோசேப்பும் இல்லை, சிமியோனும் இல்லை; பென்யமீனையும் கொண்டுபோகப் பார்க்கிறீர்கள்; இதெல்லாம் எனக்கு விரோதமாய் நேரிடுகிறது என்றான்.“**. மேலும் **ஆதி** 43:14 இல், **“அந்த மனிதன் அங்கிருக்கிற உங்கள் மற்றச் சகோதரனையும் பென்யமீனையும் உங்களுடனே அனுப்பிவிடும்படிக்கு, சர்வவல்லமையுள்ள தேவன் அவன் சமுகத்தில் உங்களுக்கு இரக்கங்கிடைக்கப்பண்ணுவாராக; நானோ பிள்ளையற்றுப் போனவனைப்போல் இருப்பேன் என்றான்.“**. இங்கு இஸ்ரவேலின் மனநிலை, தன் குடும்பம் பஞ்சத்தில் மடியாமல் இருக்க, தனக்கு பிரியமான பென்யமீனை சில காலம் பிரிய வேண்டியிருந்தது. ஆனால் அதை கூட இஸ்ரவேலால் தாங்கி கொள்ளமுடியவில்லை. காரணம், யோசேப்பிற்கு ஏற்பட்டது போல் ஏதாவது மோசம் நேருமோ என்ற பயம். ஆனால், அதே நேரத்தில் தன் முழு குடும்பத்தையும் காப்பாற்ற அவருக்கு வேறு வழியில்லை. அவர் எதிர்பார்த்ததெல்லாம் சிமியோனும், பென்யமீனும் பத்திரமாய் வீடு திரும்ப வேண்டும் என்பதாகும்.

ஆனால் இறுதியில் நடந்த காரியங்கள், அவர் யோசேப்பையும், அவருடைய சந்ததியையும் காணும்படி தேவன் கிரியை செய்தார். ஆம், எத்தனையோ நாளாய் அழுது, இனி இழந்தது இழந்ததுதான் என்று எண்ணியிருக்கையில், தேவன் யோசேப்பை இவ்வளவு பெரியவனாக்கி, இஸ்ரவேலின் முழு குடும்பத்தையும் போஷிக்கிறவராய், இஸ்ரவேலினிடத்தில் மறுபடியும் கொண்டு வந்து சேர்தார். ஆம், இருதயத்தின் வேதனை, சரீர தேவைகள், மற்றவர்களால் உண்டாகும் நெருக்கங்கள் என்று அனைத்தையும் ஒரே நாளில் இஸ்ரவேலின் வாழ்க்கையில் தேவன் மாற்றிபோட்டார். அவருடைய முடிவு இன்பமாய் இருந்தது. ஆம் இதுவே நாம் வேண்டிகொள்கிறதற்கும், நினைக்கிறதற்கும் அதிகமாய் தேவன் நம் வாழ்வில் கிரியை செய்யும் பொழுது நிகழும் காரியங்கள்.

ஆம், தினமும் பத்து பேருக்காவது ஆண்டவரை பற்றி கூற வேண்டும் என்று ஒரு தேவ ஊழியர் பேசியபோது, தேவன் என் இருதயத்தில் கிரியை செய்ததால், அடியேன் கடந்த ஆகஸ்ட் 2012 ஆம் ஆண்டில், இந்த சிறு ஊழியத்தை (இயேசுவின் வீரன்) ஆரம்பிக்க கர்த்தர் உதவினார். ஒரு வலைதளத்தை எப்படி நிர்வகிக்க வேண்டும், அதிலும் குறிப்பாக தமிழில் எவ்வாறு வடிவமைக்க வேண்டும் என்ற முன் அனுபவம் எதுவுமின்றி, தேவனே எல்லாவற்றையும் கற்று

தந்தார். ஆச்சரியபடும் விதமாய் இன்னால் வரையிலும் பலருக்கும் பிரயோஜனமாய் இருக்கதக்கதாய், வலைதளத்தை டிசைன் செய்து நிர்வகிக்க தேவன் கிருபை செய்தார். இதிலும் மேலானது, இன்று நமது வலைதளத்தில் பதியப்பட்டுயிருக்கிற அருமையான தியானங்கள் ஆகும். ஆம், வாழ்வின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் தேவன் என்னோடு பேசி, எனக்குள்ளாய் அவருடைய வார்த்தைகளை போட்டு, இன்று எத்தனையோ ஆயிர கணக்கான மக்களுக்கு பிரயோஜனப்படும் படியாய், இத்தியானங்களை எல்லாம் வெளியிட செய்தார்.

ஆம் நான் வேண்டிகொண்டதற்கும், நினைத்ததற்கும் அதிகமாய் தேவன் என் வாழ்வில் கிரியைசெய்தார், இன்றும் செய்து கொண்டிருக்கிறார். ஊழிய பாதையில் மட்டுமின்றி, இன்னும் வாழ்வின் எத்தனையோ சூழ்நிலையில் நான் நினைத்ததிற்கும் அதிகமாய் என் வாழ்வில் நன்மைகளை தந்திருக்கிறார். நாம் விதைத்தது, பிரயாசப்பட்டது ஒரு மடங்கு ஆசிர்வாதத்திற்காக, ஆனால் நூறுமடங்கு பலன் கிடைக்கும் பொழுது, அதனால் நமக்கு உண்டாகும் சந்தோஷமும், உயர்வும் சொல்லி முடியாது. எனவே, இக்கொரோனா காலத்திலும், எல்லாம் சீராகி இயல்பான வாழ்க்கை திரும்பினாலே போதும் என்று நாம் அனைவரும் எதிர்பாத்திருக்கையில். இந்த பொல்லாத சூழ்நிலையை கடப்பது மாத்திரமல்ல, நாம் எதிர்பாராத ஆசிர்வாதங்களை, நிச்சயமாய் தேவ பிள்ளைகளாகிய நம் ஒவ்வொருவருக்கும் அவர் தருவார். அதனால் இக்கொரோனாவினால் நாம் எதையாவது இழந்திருப்போமானால், தேவன் நாம் இழந்தவைகளை எல்லாம் திரும்ப தருவதுமின்றி, அதற்கும் மேலாக கிரியை செய்திடுவார். ஆமென், அல்லேலூயா.